| | | | |
|---|---|---|---|
| Headline | Electricity usage can be controlled by using smart meter | | |
| MediaTitle | Tamil Malar | | |
| Date | 23 Mar 2021 | Language | Tamil |
| Circulation | 22,000 | Readership | 180,000 |
| Section | NEWS | Page No | 5 |
| ArticleSize | 359 cm² | Journalist | NULL |
| PR Value | RM 5,536 | | |
| | | | |



# ஸ்மார்ட் மீட்டர் மூலம் மின்சார பயன்பாட்டைக் கட்டுப்படுத்தலாம்

கோலாலம்பூர், மார்ச். 23–

வாடிக்கையாளர்கள் தங்கள் மின்சார பயன்பாட்டைக் கட்டுப்படுத்த ஸ்மார்ட் மீட்டர்களைப் பயன்படுத்துமாறு டிஎன்பி நிறுவனம் நேற்று ஓர் அறிக்கையில் அறிவித்துள்ளது.


தெனகா நேஷனல் நிறுவனத்தின் மேம்பட்ட அளவீட்டு உள்கட்டமைப்பு (ஏ.எம்.ஐ) திட்ட இயக்குநர் முகமட் கவுட் அகமட் கூறுகையில், கடந்த ஆண்டு மலாக்காவில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வில், ஸ்மார்ட் மீட்டரை பயன்படுத்தும் 24 சதவீத வாடிக்கையாளர்கள் வீட்டில் மின்சார கட்டணத்தை குறைக்க முடிந்தது என்றார்.

“ஸ்மார்ட் மீட்டர் வாடிக்கையாளர்களின் சுமையைக் குறைக்கும் வகையில் செயல்படுகிறது. இது மின்சார ஓட்டத்தை அளவிடும் மற்றும் அதன் பயன்பாடு குறித்த தகவல்களை தினசரி அடிப்படையில் டிஎன்பியின் தரவு சேமிப்பு மையத்திற்கு அனுப்பும்

“மின்சார பயன்பாடு குறித்த தகவல்களை மைடிஎன்பியின் மூலம் அனைத்து வாடிக்கையாளர்களும் அறிந்துக் கொள்ளலாம். இச்செயல் மின்சாரத்தை திறமையாகவும் சிக்கனமாகவும் பயன்படுத்தஉதவுகின்றது” என்று அவர் நேற்று ஓர் அறிக்கையில் கூறினார்.

2014ஆம் ஆண்டிலிருந்து 360,000 மீட்டருக்கு மேல் தயாரிக்கப்பட்ட ஸ்மார்ட் மீட்டரை செயல்படுத்துவதற்கான





TENAGA NASIONAL

Better. Brighter.

முதல் மாநிலமாக அரசாங்கம் மலாக்காவைத் தேர்ந்தெடுத்தது. அதுமட்டுமின்றி, ஸ்மார்ட் மீட்டர்களை நிறுவும் பணியானது இப்போது கிள்ளாங் பள்ளத்தாக்கிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

MyTNB பயன்பாடு TNB பயனர்களின் மின்சார கணக்குகளை நிர்வகிப்பதற்கான இலவச மொபைல் பயன்பாடு ஆகும். இதை கூகிள் பிளே, ஆப்பிள் ஆப் ஸ்டோர் ஆகிய அகப்பக்கத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். அதே நேரத்தில் இதைப் பற்றிய முழு விவரங்களை வாடிக்கையாளர்கள் மைடிஎன்பி அகப்பக்கமான www.mytnb.com.myஇல் பார்வையிடலாம். கடந்த மாத இறுதி வரை, பதிவு செய்யப்பட்ட 4.8 மில்லியனுக்கும் அதிகமான பயனர்கள் MyTNB பயன்பாட்டைப் பயன்படுத்தியுள்ளன.

“வீட்டில் ஸ்மார்ட் மீட்டர் இல்லாத டி.என்.பி வாடிக்கையாளர்கள் மை.டி.என்.பி பயன்பாட்டைப் பயன்படுத்துவதன் மூலமும் தங்கள் மின்சார பயன்பாட்டைக் கண்காணிக்க முடியும். ஆனால், வாடிக்கையாளர்கள் தினசரி அடிப்படையில் இல்லாமல் மாதாந்திர அடிப்படையில் தங்கள் மின்சார கணக்குகளை கண்காணிக்கலாம். “இதுவரை, ஒரு மில்லியனுக்கும் அதிகமான ஸ்மார்ட் மீட்டர்கள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும், 2026க்குள் தீபகற்ப மலேசியாவில் உள்ள 9.1 மில்லியன் பயனர்கள் அனைவருக்கும் இந்த திட்டம் தொடரும்.

“ஸ்மார்ட் மீட்டரை நிறுவுவது வாடிக்கையாளர்களால் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு மிகவும் திறமையான மற்றும் விவேகமான மின்சார பயன்பாட்டை உறுதி செய்யும்” என்று அவர் மேலும் கூறினார்.

Powered by: isentia